Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 10
இதழ் 53
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க பங்குனி 21 முஹறம் 4 புதன்கிழமை (3-4-68)

ஈழநாடு சந்தா

| | | |
|---|---|---|
| மூன்று மாதம் | — | ரூ. 14-00 |
| ஆறு மாதம் | — | ரூ. 26-00 |
| ஒரு வருடம் | — | ரூ. 50-00 |

வாரப்பதிப்பு மாத்திரம்

| | | |
|---|---|---|
| மூன்று மாதம் | — | ரூ. 4-00 |
| ஆறு மாதம் | — | ரூ. 7-50 |
| ஒரு வருடம் | — | ரூ. 14-00 |

முற்பணம் கட்டவேண்டும். தபால் மூலம் அல்லது ஆள் மூலம் அனுப்பப்படும்.

ரூ. 30,000 நகை திருட்டு:

# யாழ். நகரில் களவுபோனது கலகெதரையில் கண்டுபிடிப்பு

## சந்தேகநபரை கைதுசெய்ய பொலிஸ் கான்ஸ்டபிள் தோசைசுட்டார்

— நமது காரியாலய நிருபர் எஸ். திருச்செல்வம் —

**யாழ்ப்பாணம், புதன்**

**யாழ்ப்பாணத்தில் சென்ற வாரம் பட்டப்பகலில் களவுபோனதாகத் தெரிவிக்கப்பட்ட சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் யாழ்ப்பாணம் பொலிசார் கலகெதரையிலுள்ள ஒரு வீட்டிலிருந்து நேற்று மீட்டனர்.**

**பொலிஸ்கான்ஸ்டபிள் தோசை சுட்டார்**

இத் திருட்டு சம்பந்தமாக கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரைக் கைது செய்வதற்காக யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸ்பகுதியைச்சேர்ந்த பொலிஸ்கான்ஸ்டபிள் திரு. நடராஜா கண்டுக்குளியிலுள்ள தேநீர்க்கடையொன்றில் மூன்று நாட்களாக அங்குள்ள சமையலறையில் சமையற்காரராக மாறி தோசை சுட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

**பட்டப்பகலில் திருட்டு**

கடந்த மாதம் 25-ந்திகதி நாவலர் வீதியிலுள்ள திரு. ஐ. ஆர். அரியரத்தினம் என்பவரது வீட்டிலிருந்து பட்டப்பகலில் 31,210 ரூபா பெறுமதியான நகையும் ரூபா 400 ரொக்கப் பணமும் களவுபோனதாக யாழ்ப்பாணம் பொலிசில் புகார்செய்யப்பட்டிருந்தது.

**கையடையாளம் காட்டிக்கொடுத்தது**

இதனைத் தொடர்ந்து கொழும்பிலிருந்து இங்கு வந்த கைரேகை அடையாள நிபுணர்கள் களவுபோன அறையின் கதவிலும் திறப்பிலுமிருந்த கைரேகையை பரிசோதித்தபின்னர் இது ஹட்டனைச்சேர்ந்த சின்னச்சாமி பாலகிருஷ்ணன்

(2-ம் பக்கம் பார்க்க)

## அடித்துத் துன்புறுத்தியதாக வேலைக்காரச் சிறுமி புகார்

யாழ்ப்பாணம், புதன்

வீட்டு எஜமானர்களால் துன்புறுத்தப்பட்டதாகச் சொல்லப்படும் வேலைக்காரச்சிறுமி ஒருவர் ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

ஒரு வீட்டில் வேலைபுரிந்து வந்த ஜெயலட்சுமி (12 வயது) என்ற குறிப்பிட்ட வேலைக்காரச் சிறுமி அனாதரவான நிலையில் நேற்று முன்தினம் நவாலியில் நிற்கக் காணப்பட்டாராம். இவரை கணபதிப்பிள்ளை மாணிக்கம் என்ற பெண்ணொருவர் ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததாக பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

பண்டாரவளையைச் சேர்ந்தவரெனச் சந்தேகிக்கப்படும் இச்சிறுமியை வீட்டுக்காரர்கள் அடித்ததாகவும், மண்டையை சுவரில் மோதி துன்புறுத்தியதாகவும் இவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். பொலிஸார் புலன் விசாரணை செய்து வருகின்றனர். (கா. நி)

## எதிர்க்கட்சி தலைவர் சிறிமா யாழ்ப்பாணம் வருகிறார்

### மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்வார்

கொழும்பு, செவ்.

எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா யாழ்ப்பாணம் வரவிருக்கிறார். இங்கு நடைபெறவிருக்கும், கூட்டரசாங்கக் கட்சிகளின் மேதினக் கூட்டத்தில், முக்கிய பேச்சாளராக கலந்து கொள்வார் எனத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் அனுராதபுரம் எம். பி. திரு. இரத்நாயக்கா தலைமையில் நடைபெற்ற ஓர் ஆலோசனைக்கூட்டத்தில், மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

**சுதந்திரக்கட்சி கிளைகள்**

வடபகுதியில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கிளைகளை நிறுவும் பொறுப்பை தமிழில் நன்கு பேசக் கூடிய அனுராதபுரம் எம். பி. திரு. பி. இரத்நாயக்கா ஏற்றுள்ளார். யாழ்ப்பாணத்தில் பலகிளைக் காரியாலயங்களையும் நிறுவ இவர் முயற்சித்துள்ளார்.

(6ம் பக்கம்பார்க்க)

## 'விவசாயத்துறையில் வடபகுதி மக்கள் முன்னேறிவிட்டனர்'

### மிருசுவிலில் திரு. ரத்நாயக்கா

யாழ்ப்பாணம், புதன்

"தென்னிலங்கையிலும் பார்க்க வடபகுதி விவசாயத்தில் நன்கு முன்னேறிவிட்டது. நாட்டின் உபஉணவுப்பொருள் தேவையை நிவிர்த்திசெய்ய வடபகுதி மக்கள் காட்டும் இந்த ஆர்வத்தை ஈழம்வாழ் தமிழ் மக்கள் எவரும் மறுக்கமாட்டார்கள்."

இவ்வாறு நேற்று முன்தினம் கொடிகாமத்துக்கு திடீரென விஜயத்தை மேற்கொண்டிருந்த அனுரதபுரம் எம். பி திரு. பி. ரத்நாயக்கா இங்கு தெரிவித்தார். மிருசுவில் படித்தபெண்கள் குடியேற்றத் திட்டத்துக்கு விஜயஞ்செய்த இவர் இங்குள்ள இளம்பெண்களின் முயற்சிக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

உபஉணவுற்பத்தியில் நாடு தன்னிறைவு பெற இளம் பெண்கள் இங்கு விவசாயத்தில் காட்டும் உற்சாகத்தை இலங்கையின் மற்றைய பகுதிகளில் உள்ள இளம் பெண்களும் பின்பற்றவேண்டும் என்றும், மேலைத்தேச மக்களைப்போல இங்கும் சகலரும் விவசாயத்தில் ஈடுபடவேண்டியது அவசியமென்றும் திரு. ரத்நாயக்கா எம். பி. மேலும் குறிப்பிட்டார்.

உசன், கொடிகாமம், மிருசுவில் ஆகிய இடங்களுக்கும் விஜயம் [illegible] அன்றிரவே [illegible] திரும்பினார். [கா. நி.]

## இன்று நடன அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், புதன்

செல்வி உமையாள் இரத்தினசிங்கத்தின் நடன அரங்கேற்றம் இன்று மாலை 6-30 மணிக்கு யாழ். நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. டாக்டர் ஜி. பி. மலலசேகரா தம்பதிகள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி [illegible] சொற்பொழிவாற்றுவார்கள்.

## டாக்டர் மலலசேகரா இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம், புதன்

உயர்கல்விச் சபைத் தலைவரான டாக்டர் மலலசேகரா இன்று காலை 8. 20 மணிக்கு விமான மூலம் பலாலி விமானநிலையத்தை வந்துசேருவார். திரு. மலலசேகராவுடன் அவரின் மனைவியும் இங்குவருவார்.

இன்றுகாலை 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி உயர்தர மாணவிகள் மன்றக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் இவர் இன்றிரவுபுவார். யாழ். நகரமண்டபத்தில் நடைபெறும் நடன நிகழ்ச்சியொன்றுக்கும் தலைமை தாங்குவார்.

நாளைக்காலை "புளூறிபன் ஹோட்டலில்" வடபகுதி தலைமையாசிரியர்கள் சங்கக் கூட்டத்தில் உயர் கல்வி கற்பதில் இன்றுள்ள கஷ்டங்கள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்திய பின்னர் நாளை நண்பகல் விமான மூலம் கொழும்புக்கு திரும்புவார். [கா. நி]

## தமிழக சட்டசபைகளின் கூட்டத் தொடர் முடிவு

சென்னை, ஏப் 2

தமிழக சட்டசபைகளின் பட்ஜட் கூட்டத் தொடர் இன்றுடன் முடிவுற்றதாக மாநில கவர்னர் சர்தார் உஜ்ஜல்சிங் அறிவித்துள்ளார்.

இக் கூட்டத் தொடரில் நிறைவேறுமல் போன முக்கிய மசோதாக்களைத் தவிர்த்து மற்ற எல்லா பிரேரணைக்கும் இதில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு சி. சுப்பிரமணியம் மீதான உரிமைப்பிரச்சினையும் காலாவதியாகிவிடும்.

பஸ் தொழிலாளருக்கும், மாணவர்களுக்குமிடையில் ஏற்பட்ட கலவரம் பற்றி நடைபெறும் நீதிவிசாரணை பொது விசாரணை தான் என்று சட்ட மந்திரி திரு. மாதவன் இன்று நிருபர்களிடம் கூறினார். விசாரணையில் பொதுமக்களும் சாட்சியமளிக்கலாம் என்று சட்டமந்திரி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நாம் எவ்வளவுக்கெவ்வளவு சுயநலமிகளாக இருப்போமோ, அவ்வளவுக்கு துக்கமும் படவேண்டியிருக்கும். சுகத்துக்கு வழி, நம்மை பிறரது பணிக்காக அர்ப்பணித்துக் கொள்வதுதான். மக்கள் சேவையே மகேசன் சேவை.

— சுவாமி ராமதாஸ்.


# ஈழநாடு

Eelana u National Tamil Daily
Telegrm/ EELANADU Jaffna
Post Box/ 49 Jaffna
Telephone/ 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் பங்குனி மாதம் 21ம் திகதி [3-4-68]


## மூலகாரணம்

ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற சட்டம் இல்லாமல், பல பல அரசியல் கட்சிகளும் போட்டா போட்டியுடன் தொழிற் சங்கங்களை அமைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதன் விபரீத பயன்களை இலங்கை பொதுமக்கள் அனுபவித்து வருகின்றார்கள். இப்பொழுது திருகோணமலை, கொழும்பு, காலி துறைமுகங்களிலும், பல வர்த்தக ஸ்தாபனங்களிலும் பல்லாயிரக்கணக்கான சிப்பந்திகள் வேலை நிறுத்தம் செய்துள்ளதற்கும் இச்சங்கங்களிடையேயுள்ள போட்டிகளே அடிப்படைக்காரணமென்பது பகிரங்க ரகசியம்.

அடிக்கடி வேலைநிறுத்தங்கள் நடைபெறுவதால் பொதுமக்களுக்கு மட்டுமன்றி, தொழிலாளருக்கும் எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுகின்றனவென்பதை பார்க்கத் தேவையில்லை. முடிவில் எல்லாவற்றுக்கும் பொறுப்பு அரசாங்கம் தான் ஏற்கவேண்டியிருக்கும். இந்நிலையில் பிரதம மந்திரியின் நிலைமை சற்றும் பொறுமைப்படத்தக்கதல்ல.

திருகோணமலை துறைமுகத்தில் 23 தொழிலாளரின் நியமனம் சரியல்லவென்று, துறைமுக அதிபர் ஒப்புக்கொண்டு, அவர்களை வேலைநீக்கம் செய்ததும், இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தார் திருப்தியடைந்தனரெனினும், மற்ற தொழிற்சங்கங்கள் எல்லாம் அதிருப்தியடைந்தன. ஆகவே அச் சங்கத்தினரைச் சேர்ந்த தொழிலாளர்வேலைநிறுத்தம்செய்கின்றார்கள். இதே சமயம் முந்திய வேலைநிறுத்த காலத்தில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதாக குற்றஞ் சாட்டப்பட்டு, அதற்காக 140 பேர்களை தற்காலிகமாக வேலைநீக்கம் செய்துள்ளதை, இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தார் ஆட்சேபித்து அவர்களை மீண்டும் வேலைக்கு நியமிக்கவேண்டுமென்று கேட்டு, இலங்கையிலே பெரிய பொது வேலைநிறுத்தத்தை நடத்திவருகின்றனர். ஆக எல்லா சங்கங்களும் ஏகோபித்து வேலைநிறுத்தம்செய்கின்றன! வேலைநிறுத்தத்தால்தான் நியாயம் கிடைக்குமென்று அவர்கள் கருதுகின்றனர் போலும். இவ்வித நிலை நீடிப்பது சற்றும் சரியல்ல.

பொதுவாக தொழிலாளர் ஏழைகள். வேலையிலிருந்துநீக்கப்பட்டால், அவர்களது குடும்பங்கள் பட்டினியால் தவிக்கும். இதேசமயம், அரசியல் தலைவர்களின் தூண்டுதலால், தொழிலாளரிற் சிலர் தவறான காரியங்களைச் செய்வதும் சகஜம். அதனுல் முடிவில் எளிய தொழிலாளர் பலியாக்கப்படுவது பெரிய அன்னியாயம். இவ்விஷயத்தை மனிதாபிமானத்துடன் கவனித்து சுயநலமிகளால்தொழிலாளர் பலியாக்கப்படாமல் பாதுகாக்கநடவடிக்கை எடுக்க வேண்டும்.

இருபத்துமூவர் விஷயத்தைப்பற்றி ஆராய ஒரு நீதிவிசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அதே கமிஷனே அல்லது புதிய விரிவான கமிஷனே 140 பேருடைய விஷயத்தையும் விசாரிக்கும்படி செய்வதாயின், இன்றைய பொது வேலைநிறுத்தம் நீடிக்காமல் சுமுகமான ஒரு முடிவுக்கு வர வழியுண்டு. தவறு செய்யும் தொழிலாளர்மீது பழிவாங்கும் நடவடிக்கை எடுக்காமல், தண்டனையை அனுதாபத்துடன் அளிப்பதே தொழில்அமைதிக்கு வழிசெய்யும். பலப் பரீட்சை செய்யாமல் பிரதமர் உடனடியாக இதைக் கவனிக்கவேண்டும்

இதேசமயம், இவ்வேலைநிறுத்தங்கள் ஏற்படுவதற்கு மூலகாரணம், பல போட்டிச் சங்கங்களை சட்டப்படி அங்கீகரித்திருப்பதுதான். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்தான் என்று சட்டம் செய்துவிடுவதாயின் தொழிலாளரிடையே அதிக நட்புறவும், ஒற்றுமையும், பொறுப்பும் ஏற்படும். அற்ப காரணங்களுக்காக சச்சரவுகள் பெருகி, பெரிய வேலை நிறுத்தங்கள் ஏற்படாவண்ணம் தடுக்கவும்இதுதான் நல்ல வழி. பிரதமருக்கு இவ்விஷயம் தெரியாமல் இருக்கமுடியாது. அவர் இந்த நடவடிக்கையை துணிச்சலுடன் எடுத்து நோயின் மூலகாரணத்தை நீக்கினுல்தான், அவர் தமது அரசாங்கத்துக்கு மட்டுமன்றி, நாட்டுக்கும் தொழிலாளருக்கும் நன்மை செய்தவராவார்.

# "யாழ். கச்சேரியில் உண்ணுவிரதம் மேற்கொள்வோம்"

## ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்கம் அறிவிப்பு

அனுராதபுரம், செவ்.

எங்களது கோரிக்கைக்கு இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை தைமாதம் 15-ந் திகதி எமது சங்க உறுப்பினர்கள் சிலர் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் உண்ணுவிரதத்தை மேற்கொண்டிருந்த சமயம் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் தலையீட்டால் உண்ணுவிரதத்தை நிறுத்தினேம். அவர் மிகவிரைவில் பேச்சுவார்த்தை நடாத்துவதாகக் கூறியிருந்தபோதிலும் இதுவரைஎதுவிதபயனும் கிடைக்கவில்லை. ஆதலால்இம்மாதம் 20-ந்திகதி தொடக்கம் யாழ். கச்சேரி வாசலில் உண்ணுவிரதம் மேற்கொள்ளவிருக்கிறோம்.

இவ்வாறு குறிப்பிட்ட மகஜர் ஒன்றை ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கபொதுக் காரிய தரிசி திரு. ஆர். செல்லையா யாழ்ப்பாண பொலிஸ் அதிபருக்கு அனுப்பிவைத்துள்ளார்,

பொதுமக்களுக்குக் கஷ்டம் விளைவிக்காத வகையில் மேற்கொள்ள விருக்கும் உண்ணுவிரதத்தில்100 பேர் அங்கம் வகிப்பார்கள் என்றும் யாழ் கச்சேரிவாசலில் இவ் உண்ணுவிரதத்தை மேற்கொள்ள அனுமதி தரும்படியும் அவர்கள் பொலிஸ் அதிபரைக் கோரியுள்ளனர்.

## பயமுறுத்தியதாக வழக்கு

வல்வெட்டித்துறை, செவ்

பருத்தித்துறை பஸ்டிப்போவைச் சேர்ந்த பஸ் சாரதியான வேலுப்பிள்ளை செல்வரத்தினம் என்பவர் புலோலி தெற்கைச் சேர்ந்த வைரவப்பிள்ளை மாப்பாணர் என்பவரை இம் மாதம் 17-ந்திகதி மந்திகை என்னுமிடத்தில் பஸ்ஸிற்குள் வைத்து கொலை செய்வேன் எனப் பயமுறுத்தியதாகப் பருத்தித்துறைப் பொலிசார் வழக்கொன்றை பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் தாக்கல் செய்துள்ளனர்.

## இன்றைய பலன்

பங்குனி மீ 21 உ

[3-4-68]

புதன்கிழமை

திதி- பஞ்சமி பகல் 1-56 மேல் ஷஷ்டி.

நட்சத்திரம்- ரோகிணி இரவு 7-47 மேல் மிருகசீரிடம்.

ராகுகாலம்- 12-10—1-40.

சுபநேரம்- 4-40—6-10.

இன்று பிறந்தவர்களுக்கு — சுமாரான ஆண்டாயினும் முயற்சி இருப்பின் முன்னேற்றமுண்டு. பெண்களால் கலகம் விளையக்கூடும். விளையாட்டு வீரர்களுக்கு பரிசில்கள் கிடைக்கலாம். ஆசிரியர்களுக்கு மதிப்பு உயரும், நீண்ட யாத்திரையும் அதன் மூலம் மனநிம்மதியுமுண்டாகும்.

மேஷம்- தானிய நஷ்டம், தனிவழி நாட்டம்.

ரிஷபம்- வாழ்க்கையில் புயல், வரவும் தடைபடும்.

மிதுனம்- நிதியில் அபிவிருத்தி, நிம்மதி பிறக்கும்.

கடகம்- இரும்பு மனம் இருண்ட வாழ்வு.

சிம்மம்- அன்னையின் ஆணை, அமைதிக்கு வழி

கன்னி- பனிமலர்ப் பார்வை, பரிவின் உதயம்.

துலாம்- வேவுக்கணை தொடுப்பர், விழிப்புடன் இரு.

விருச்சிகம்- காதல் கரும்பு, சுவைத்திட விரும்பு.

தனுசு- சிநேகிதர் பகை, சிந்தையில் குழப்பம்.

மகரம்- பிதாவழிச் சுகம், பெருமையும் சேரும்.

கும்பம்: இருப்பிட மாற்றம், இனியவை நடக்கும்.

மீனம்: நினைத்ததில் வெற்றி, நிம்மதி பிறக்கும்.

சோதிடக்கலாநிதி

திருமலை வேலுப்பிள்ளை

## மாணவர்களுக்கு உபராஷ்டிரபதி திரு. கிரி அறிவுரை

கோயம்புத்தூர், ஏப். 2

மாணவ சமுதாயம் நேர்மை, சத்தியம் கட்டுப்பாடு ஆகிய குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டுமென இந்திய உப ராஷ்டிரபதி திரு. வி. வி. கிரி கோயம்புத்தூரில் ஒரு பள்ளிக்கூட தொடக்க விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் கேட்டுக்கொண்டார்,

மாணவர்கள்தான் வருங்காலச் சமுதாயத்தை உருவாக்குபவர்கள் என்றுகுறிப்பிட்ட உப ராஷ்டிரபதி ஒவ்வொருநாளும் சில நிமிடங்களாவது ஆத்ம பரிசோதனைக்கு மாணவர்கள் ஒதுக்கிக் கொள்ளப் பழகவேண்டியது அவசியமென வலியுறுத்தினர்.

## யாழ். நகரில்......

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

என்ற 28 வயதுடைய ஐ. ஆர். சி. யினுடைய கையடையாளம் எனத் தெரிவிக்கப்பட்டது,

இத் தகவலைத் தொடர்ந்து பொலிசார் நடத்திய புலன்விசாரணையில் சந்தேக நபரான பாலகிருஷ்ணன் சுண்டிக்குளியிலுள்ள குறிப்பிட்ட தேநீர்க்கடைக்கு சாப்பிட வருவது வழக்கமெனத் தெரியவந்ததாம். இதனைத் தொடர்ந்தே கான்ஸ்டபிள் திரு. நடராசா இக் கடைக்குச் சென்று தோசை சுடும் சமையற்காரராக கடமையாற்றி நேற்று முன்தினம் நண்பகல் சந்தேகநபரான பாலகிருஷ்ணனைக் கடையில் வைத்து கைதுசெய்தார்.

இதன் பின்னர் இவரை விசாரணை செய்தபோதே கலகெதரையிலுள்ள ஒரு வீட்டில் களவாடப்பட்டதாகக் கூறப்பட்ட நகைகள் இருப்பது பொலிசாருக்குத் தெரியவந்தது.

### கலகெதரைக்கு ஜீப் பறந்தது

வடபகுதி உதவிபொலிஸ் சுப்பிரிண்டன் திரு ஆர். கி. தவருஜா நேற்று முன்தினம் நண்பகல் சந்தேக நபரை பொலிஸ் ஜீப்பில் கலகெதரைக்கு கூட்டிச்சென்றுஅங்குள்ள வீட்டில் தேடுதல் நடாத்தி ரூ.30.000 பெறுமதியான நகைகளை கண்டுபிடித்தார்

இக்களவு சம்பந்தமாக ஓய்வுபெற்ற பொலிஸ்சாஜன்ட் ஒருவரும் பொலிசாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில்வைக்கப்பட்டார்.

சந்தேக நபரான பாலகிருஷ்ணன் இம்மாதம் 22-ந் திகதி வரை ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். பொலிசார் தொடர்ந்து விசாரணை நடத்துகின்றனர். [கா. நி.]

[5-ம் கலத்தொடர்ச்சி]

விளங்கினேன். எல்லாம் 'மேக்கப்'பின் ஜாலவித்தை' நிஜ வாழ்க்கையையே ஒரு நாடகமாக மதிக்கும் கலையரசர், இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து நாடகக் கலைக்குத் தொண்டாற்ற வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.

—வழிப்போக்கன்

## நாட்டிலும் நகரிலும்

இன்று என்னத்தைப் பற்றி எழுதலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கையில் 'சொர்ணர் ஐயா வந்திருக்கிறுர். என்ற அழைப்பைக் கேட்டவுடன் நிம்மதி உண்டாகிற்று.

கலையரசு சொர்ணலிங்கம் வந்துவிட்டால் கதைகளுக்குக் குறைவில்லை. கலையுகம் சம்பந்தப்பட்ட எத்தனையோ பலவிஷயங்கள் அவருடைய மனதில் குமுறிக்கொண்டிருக்கும். அவற்றை எப்படியாவது யாருக்காவது சொல்லிவிட வேண்டுமென்று துடிதுடிப்பார்.

ஆகையினுல தான் அவர் வந்தவுடனே 'சரிதான், எழுதுவதற்குச் சங்கதி கிடைத்துவிட்டது' என்று சந்தோஷப்பட்டுக்கொண்டு அவரைப் பார்க்கச் சென்றேன் நான் நினைத்தது பிழைபோகவில்லை

சென்ற மாதம் 30ந் திகதி அவர் இந்தப் பிரபஞ்சத்தில் 79 ஆண்டுகளைக் கழித்துவிட்டு 80வது படியில் ஏறியிருக்கிறுர்.

அன்றைய தினம் கோப்பாய் பெண்கள் ஆசிரியைக் கல்லூரியில் ஒரு நாடகப் போட்டி. கலையரசை மத்யஸ்தம் வகிக்கும்படி கேட்டிருந்தார்கள். அன்று தமது பிறந்த நாளானபடியால் தம்மை மன்னிக்கும்படி கலையரசு கேட்டுக்கொண்டார். ஆசிரியைப் பெண்கள் விடவில்லை. 'நீங்களும் உங்கள் பாரியாரும் கட்டாயம் வந்தே தீரவேண்டும். பிறந்த நாள் கொண்டாட்டத்தை இங்கேயே வைத்துக்கொள்ளலாம்' என்று வற்புறுத்தினுர்கள். இந்த அன்பழைப்பைச் சார்ணர் ஐயா மறுக்கமுடியவில்லை.

80வது பிறந்த தினத்தன்று சொர்ணலிங்கம் தம்பதிகள் கோப்பாய்க்குச் சென்றனர். அங்கே அவர்களுக்கு எதிர்பாராத வரவேற்புக் கிடைத்தது. தோரணங்கள், வாழைகள், கடதாசிப்பூச் சோடனைகள் எல்லாம் பிரமாதமாயிருந்தன.

கல்லூரி வாயிலில் சுமார் 200 ஆசிரியைப் பெண்மணிகள் இரு மருங்கிலும் அணிவகுத்து நின்று தம்பதிகளை வரவேற்றனர். ஆலாத்தி எடுக்கப்பட்டது.

பெண்மணிகள் பலர் கலையரசுக்கு வாழ்த்துப்பா பாடினுர்கள். பின்பு நாடகப்போட்டி நடைபெற்றது. சொர்ணலிங்கம் ஐயாவுக்கு நடிப்பு என்பது உதிரத்தில் ஓடுகிறது. சாதாரண வாழ்க்கையிலும்கூட அவர் செய்வதெல்லாம் நடிப்புத்தான்.

அன்றைய கொண்டாட்டத்தில் பேசிய ஓர் ஆசிரியை 'சொர்ணர் ஐயா இவ்வளவு வயது வந்தும் இவ்வளவு ஒய்யார நடைபோட்டு வருகிறுர்' என்று வியந்தாராம்.

இதைப் பற்றி சொர்ணர் ஐயா ஒரு குறும்புச் சிரிப்புடன் சொன்னுர். 'அந்தப் பிள்ளைக்கு என்னுடைய பொட்டுக்கேடு தெரியாது. வீட்டில் நடமாடும்போது பொல்லுப் பிடித்துக்கொண்டு தள்ளாடித் தள்ளாடித்தான் நடப்பேன். வெளியிடங்களுக்குப் போகும்போது மட்டும் உஷாராக நிமிர்ந்து கம்பீர நடைபோடுவேன். இது என்னுடைய நாடக மேடைப் பழக்கம். இளம் வயதில் நான் விஸ்வாமித்திரனுக்கு நடித்தபோது பலர் வந்து என்னுடைய கட்டுமஸ்தான தேகத்தைப் பற்றி ஆகாயமளவில் புகழ்வார்கள். ஆனுல் உண்மையில் நான் அப்பொழுது ஈர்க்கும் கம்புமாகத் தான்

[4-ம் கலம் பார்க்க]

**வியட்னாம்**

# ஜோன்சனின் அறிவிப்பைத் தொடர்ந்து புதிய சமாதான முயற்சிகள்

லண்டன், ஏப்ரல் 2

**வியட்னாம் போருக்கு ஒரு சமதான முடிவைக் காணும் பொருட்டு, அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் அறிவித்துள்ள குண்டு வீச்சுக் குறைப்பைத் தொடர்ந்து வியட்னாம் சமாதானத்துக்கான புதிய முயற்சிகளில் பிரிட்டனும் பிரான்சும் இறங்கியுள்ளன.**

நேற்று, பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு. மைக்கேல் ஸ்டீவாட், லண்டனிலுள்ள ரஷ்யத் தூதுவரைச் சந்தித்து, வியட்னாம் பிரச்னை பற்றிப் பேசினார். பிரிட்டனும், ரஷ்யாவும் இந்தோ-சீன மீதான ஜெனிவா மாநாட்டின் கூட்டுத் தலைமை நாடுகள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### ரஷ்ய கருத்து

திரு. ஜோன்சனின் குண்டு வீச்சுக் குறைப்பு நடவடிக்கையை ரஷ்ய தூதுவர், 'நிபந்தனையுடன்கூடிய முழுமையற்ற ஒரு நடவடிக்கையாகும்' என்று வர்ணித்துள்ளார்.

'திரு. ஜோன்சனின் அறிவிப்பு, ஒரு சாமர்த்திய உத்தியே' என்று ரஷ்யப் பத்திரிகையான டாஸ் குறிப்பிட்டுள்ளது. அமெரிக்கா, வட வியட்னாம் மீதான குண்டு வீச்சை நிபந்தனையின்றி, முற்று முழுதாக நிறுத்தவேண்டுமெனவும், அமெரிக்கத் துருப்புகள் தென் வியட்னாமிலிருந்து வெளியேறவேண்டும் என்றும் கோரிக்கையை, இந்த அறிவிப்பு புறக்கணித்துள்ளதாகவும் 'டாஸ்' கருத்து வெளியிட்டது.

## வட வியட்னாம் அதிருப்தி

ஜோன்சனின் புதிய சமாதான முயற்சி, வியட்னாமில் நிரந்தர சமாதானத்துக்கு வழிவகுக்கும் ஓர் அடிப்படையை அளிக்கவில்லையென பீகிங்கிலுள்ள வட வியட்னாம் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. வட வியட்னாமின் நிபந்தனைகளை அது பூர்த்தி செய்யவில்லை எனவும் அவை குறிப்பிட்டுள்ளன.

பாரிஸில், அமெரிக்காவின் போர்க் குறைப்பு நடவடிக்கைக்கு ஹனோயின் பதிலைப் பெறுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது.

ஆனால் பிராக்கிலுள்ள வட வியட்னாம் அதிகாரி ஒருவர் ஜோன்சனின் அறிவிப்பைத் தமது அரசாங்கம் கவனமாகப் பரிசீலனை செய்யுமென அறிவித்துள்ளாராம்.

## தென் வியட்னாம் ஜனாதிபதி வாஷிங்டன் வருகிறார்

இதற்கிடையில், தமது புதிய வியட்னாம் சமாதான நடவடிக்கைகள்பற்றி விவாதிக்கும் நோக்கத்துடன், அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சன் தென்வியட்னாம் ஜனாதிபதி வொன் தியூவை வாஷிங்டன்வரும்படி அழைத்துள்ளார். திரு. வொன் தியூவும் ஜோன்சனின் அழைப்பை ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தமது புதிய நடவடிக்கைக்கு அனுசரணை காட்டுமாறு ஜோன்சன் வடவியட்னாம் அரசாங்கத்தை மீண்டும் கேட்டுக்கொண்டுள்ளார்.

### கென்னடியை சந்திப்பார்

திரு. ஜோன்சன், காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன் எவ். கென்னடியின் தம்பியும், வியட்னாம் போரில் அமெரிக்க அரசாங்கக் கொள்கையைக் கண்டித்து வருபவமான செனட்டர் ரொபேட் கென்னடியைச் சந்தித்து, வியட்னாம் விவகாரத்தை விவாதிக்க இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### கனடாவில்

கனடா வெளியுறவு மந்திரி திரு. போல் மார்டின் அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சனின் சமாதான முயற்சியை வரவேற்றுள்ளார். வியட்னாமில் சமாதானத்தை நிலைநாட்டக் கனடா தன்னாலான ஒத்துழைப்பை அளிக்குமெனவும் அவர் தெரிவித்தார். வட வியட்னாமும் பதில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

லண்டனில், காமன்ஸ் சபையில் பேசுகையில், திரு ஜோன்சனின் அறிப்பு 'நியாயமான, கௌரவமான தீர்வுக்கு வழிவகுப்பது' என்று பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு. மைக்கேல் ஸ்டீவாட் கருத்துத் தெரிவித்துள்ளார்.

### யூதாண்ட்

வட வியட்னாமில் பெரும் பாகம் மீதான குண்டு வீச்சை நிறுத்துமாறு அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸன் வெளியிட்ட அறிவிப்பு, முன்கூட்டியே ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்டுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. ஆனால், இதுவரை யூதாண்ட், இதுசம்பந்தமாகத் தமது கருத்தெதுவையும் வெளியிடவில்லை. உரிய காலத்தில் அவர் ஓர் அறிக்கையை வெளியிடுவாரென அவரைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

யூதாண்ட், ஐ நா.வில் உள்ள ருமேனிய தலைமைப் பிரதிநிதியைச் சந்தித்து, வியட்னாம் பிரச்னை பற்றிப் பேசியுள்ளதாகத் தெரியவருகிறது. ருமேனிய மூலம், வியட்கொங் வியட்னாம் சம்பந்தமான தகவல்களை முன்னர் அறிவித்திருக்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### இந்தியாவில்

புதுடில்லியில், அமெரிக்க ஜனாதிபதியின் போர்க் குறைப்பு அறிவித்தலுக்குப் பொதுவாக வரவேற்புக் கிடைத்துள்ளது. வியட்னாமில் சமாதானத்தை நிலைநாட்டவும், அங்கு நடைபெறும் நீண்ட போரை ஒரு முடிவுக்குக்கொண்டு வரவும், இந்தியா தன்னாலான சகல முயற்சிகளையும் எடுக்கத் தயாராகவிருப்பதாக இந்திய அரசாங்க வட்டாரங்கள் கருத்துவெளியிட்டன.

இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதுவர் திரு. செஸ்டர் பவுல்ஸ், நேற்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்து வட வியட்னாம் மீதான அமெரிக்கக் குண்டுவீச்சைப் பெருமளவில் குறைக்கும் அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸனின் அறிவிப்பு அடங்கிய முழுப் பேச்சின் பிரதியொன்றை அவரிடம் ஒப்படைத்தார்.

### பிரிட்டனில் பயிலும் இலங்கை சுகாதார போதனாசிரியர்கள்

லண்டன், ஏப். 2

இலங்கையைச் சேர்ந்த மூன்று சுகாதாரபோதனாசிரியர்கள்தற்சமயம் பிரிட்டனில்டிப்ளோமாபயிற்சிவகுப்புகளில் பங்குபற்றிவருகிறார்கள். லண்டன்சர்வகலாசாலையைச்சேர்ந்த சுகாதார நிறுவனத்தில் சுகாதாரக் கல்வி பற்றி அவர்கள் பயின்றுவருகிறார்கள்.

இவர்களில் ஒருவர் திரு. கே குமாரசிங்கம். வவுனியாவிலுள்ளசுகாதாரசேவை இலாகாவில்கடமையாற்றும் இவர் கடந்த செப்டெம்பர் மாதம் பிரிட்டன்வந்து சேர்ந்துள்ளார். எதிர்வரும் ஜூலைமாதம் இவர் தமது பயிற்சியை முடித்துக்கொண்டு தாயகம் திருப்புவார். கொழும்புத் திட்டத்தின்கீழ் உபகாரநிதி பெற்று இவர் இந்தப் பயிற்சியை மேற்கொண்டுவருகிறார் கொழும்பிலுள்ள காசநோய்

(4-ம் பக்கம் பார்க்க)

## போர் விலக்குப் பகுதிக்கு வடக்கே குண்டு வீச்சு

சைகோன், ஏப்ரல் 2

இதற்கிடையில், வியட்னாம் போர் விலக்குப் பிராந்தியத்துக்குச் சுமார் 300 மைல் தூரத்தில் வட வியட்னாம் இலக்குகள்மீது அமெரிக்க விமானங்கள் குண்டு வீசியுள்ளதாகச் சைகோனில் உள்ள அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

போர் விலக்குப் பிராந்தியத்துக்கு வடக்கே இன்னும் எவ்வளவு காலம் தொடர்ந்து அமெரிக்க விமானங்கள் தாக்குதல் நடத்துமெனக் கேட்டபோது, அதுபற்றி எதுவும் அறிவிக்க அமெரிக்க இராணுவ அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

## பந்தோபஸ்து சபையில் மே. ஆசியா பற்றி விவாதம்

### இஸ்ரேல்—ஜோர்தான் பரஸ்பர குற்றச்சாட்டு

நியூயோர்க், ஏப்ரல் 2

மேற்குஆசியப்பிரச்னையை விவாதிக்க நேற்றிரவு இங்கு கூடிய ஐ. நா. பந்தோபஸ்து சபை, தனது விவாதத்தை மீண்டும் ஒத்திப்போட்டுள்ளது.

சபையில் பேசிய ஜோர்தான் பிரதிநிதி, இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும், அவற்றைத் தடைசெய்யச் சபை நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

தான் கைப்பற்றிய அரபுப் பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல் தனது துருப்புகளை விலக்கிக்கொள்ளவேண்டுமென்றும் ஜோர்தான் பிரதிநிதி, சபையில் கேட்டுக்கொண்டார்.

இஸ்ரேல் பிரதிநிதி பேசுகையில், அரபு கொரில்லாக்களின் பலாத்கார நடவடிக்கைகள் தமது நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்தாக விளங்குவதாகப் புகார் கூறினார்.

இது இப்படியிருக்க, நேற்று ஜோர்தான் ஆற்றுக்கு குறுக்கே ஜோர்தான் துருப்புகளும் இஸ்ரேல் துருப்புகளும் துப்பாக்கிப் பிரயோகத்தில்ஈடுபட்டன.

அரபியர் ஒருவரும், இஸ்ரேலியர் ஒருவரும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## 'எதிரி இறந்தவரின் இடது பக்கத்தோளில் வெட்டினார்'

### இளவாலை கொலைவழக்கில் சாட்சியம்

குரும்பசிட்டி, செவ்

சம்பவநாள் பகல் முழுவதும் தோட்டத்தில் வெங்காயம் கட்டுவதில் நல்லையாவுடன் ஈடுபட்டிருந்தேன். இறந்தவரும் எனக்கு அருகிலுள்ள தனது தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தார். சுமார் மாலை 6 மணியளவில் நானும் நல்லையாவும் வீட்டுக்கு தோட்டத்திலிருந்து திரும்பினோம். அப்போது தனது சகோதரனின் வீட்டுக்கு போவதற்கு இறந்தவரும் எங்களுடன் கூடிக்கொண்டு வந்தார். நாங்கள் மூவரும் நடந்து வந்துகொண்டிருக்கையில் எதிரி தனது வீட்டிற்கு சுமார் 75 யார் தூரத்தில் நின்றவாறு நாகனுடன் தூஷித்து ஏசிப் பேசிக்கொண்டிருந்தார். பேச்சுப்படும் போது நாகன் தன் வீட்டுக்கு அருகில் நிற்கக் காணப்பட்டார். இந்நேரம் தனது கையில் கோவில் ஆட்டுக்கடா வெட்ட உபயோகிக்கப்படும் கத்தியொன்றை எதிரி வைத்திருந்தார்.

மல்லாகம் மஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் இளவாலை கொலைவழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது கந்தன் மாணிக்கம் என்பவர் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

தமது சாட்சியத்தில் மாணிக்கம் மேலும் கூறியதாவது:-

எனக்கும் நல்லையாவிற்கும் முன்னால் போய்க்கொண்டிருந்த காலஞ்சென்றவர் எதிரியைக் கடந்து பேச்சுப் பட்டுக்கொண்டு நின்ற சகோதரன் நாகனிடம் ஓடினார், இந்நேரம் எதிரி பின்பக்கமாக வந்து கத்தியால் இறந்தவரின் இடதுபக்க தோளில் வெட்டினார். வெட்டுசகாயத்துடன் காலஞ்சென்றவர் சிறிய தூரம் ஓடிப்போய் நிலத்தில் விழுந்துவிட்டார். உடனே நானும் நல்லையாவும் எதிரியை துரத்தி கத்தியைப் பறித்து எடுத்ததும் எதிரி கத்தியை விட்டுவிட்டு ஓடிவிட்டார். நல்லையா இறந்தவருக்கு தண்ணீர் கொடுத்தார் பின்னர் அவர் இறந்துவிட்டார். நான்கிராம சேவையாளரிடம் சென்று அறிவித்து பின் பொலிஸ் நிலையம் போய் கத்தியை கையளித்து வாக்குமூலம் அளித்தேன். எதிரியை பல காலமாக எனக்குத் தெரியும்.

இறந்தவரின் பிரேத பரிசோதனை நடத்திய மாவட்ட உதவி வைத்திய அதிகாரி டாக்டர் என் பத்மநாதன் நல்லையா ஆகியோரும் சாட்சியமளித்தனர், எதிர்தர

(4-ம் பக்கம் பார்க்க)

### பயிர்நோய் நிபுணர் சர்வதேச மாநாடு

லண்டன், ஏப். 2

பயிர் நோயால் சம்பந்தமான சர்வதேச மாநாடு ஒன்று எதிர்வரும் ஜூலை மாதம் லண்டனில் உள்ள இம்பீரியல் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. உலகடங்கிலுமுள்ள 60 நாடுகளைச் சேர்ந்த சுமார் 2000 பயிர்நோயியல் நிபுணர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்வார்கள்.

''மனித சமுதாய சேவையில் பயிர்நோயியல்'' என்பதே இந்த மாநாட்டில் எடுத்துக்கொள்ளப்படும் முக்கிய விஷயமாகும். பல்வேறுநோய்கள் காரணமாக உலகவிநியோகத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்துக்குறித்து இந்தமாநாட்டில் விவாதிக்கப்படும். அத்துடன் வைரசுகள், மற்றும் கிருமிகளால் உண்டாகும் பயிர்நோய்கள் பற்றியும் அவற்றைத் தடுத்துக் கட்டுப்படுத்தும் மார்க்கங்கள் பற்றியும் ஆராயப்படும்.

பிரிட்டனிலுள்ள ரோதஸ்ரட் ஆராய்ச்சி நிலையத்தின் அதிபரும், பிரபல பயிர் நோயியல் நிபுணருமான சேர். பிரட்டிக்போடன் இந்த மாநாட்டுக்குத் தலைமை வகிப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைச் சாராயமென தேநீர்நிரப்பி விற்பனை?

யாழ்ப்பாணம், புதன் வெள்ளைச் சாராயம் விற்பனை செய்வதில் யாழ்ப்பாணத்தில் பெரும் மோசடி நிலவுகின்றதாம். இதனைக் கண்டுபிடிப்பதில் நேற்று முன்தினம் பொலிசார் எடுத்த முயற்சி ஓரளவுக்குப் பலனையும் கொடுத்ததாகத் தெரிகின்றது. தேநீரை வெள்ளைநிறவெற்றுச் சாராயப் போத்தலில் நிரப்பி ஒவ்வொரு மாதமும் 1-ந் திகதியும் வெள்ளைச்சாராயம் எனப் பொதுமக்களுக்கு கூறி விற்பதில் ஒரு கோஷ்டி கடந்த பல மாத காலமாக இங்கு இயங்கிவருவதாகப் பொலிசாருக்கு கிடைத்த தகவல் ஒன்றைத் தொடர்ந்தே பொலிசார் இதுபற்றிய விசாரணையில் ஈடுபட்டனர்.

இம்மாதம் 1-ம் திகதி பொலிசார் நடத்திய விசாரணையில் இந்த மோசடிக் கோஷ்டியைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார் [கா. நி]

## வடபகுதி விவசாய முகாம்களில் சிங்கள மய முயற்சி?

யாழ்ப்பாணம், செவ் வடபகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட விவசாயப்படை முகாம்களைச் சிங்களமயமாக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. இம்முயற்சிக்கு மேலிடத்தின் செல்வாக்கைப்பெற நினைக்கும் தமிழ் அதிகாரிகள் பக்கபலமாக உள்ளதாகவும் கூறப்படுகிறது.

தமிழ்ப் பகுதிகளிலுள்ள விவசாயப் படையில் சேர்ந்துள்ள வீரர்கள் பதவி உயர்வும் சம்பள உயர்வும்பெற வேண்டுமெனில் சிங்களம் படிக்கவேண்டுமெனவும், சிங்கள பாஷையில் 'பரேட்' அணிவகுப்பு முறைகளைப் பயிலவேண்டுமெனவும் விஸ்வமடுமுகாமைச்சேர்ந்த சுமார் 200 விவசாயப்படை வீரர்கள் மத்தியில் ஓர் அதிகாரி தெரிவித்தாராம்.

விஸ்வமடு விவசாயப்படை முகாமில் இப்பொழுது சிங்களத்தில் அணிவகுப்பு உத்தரவுகள் கொடுக்கப்பட்டு வருவதாகவும், வெகுவிரைவில் சிங்களம் கற்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் பொறுப்பதிகாரியால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

இப்பொழுது ஒவ்வொரு விவசாயப்படை வீரர்களுக்கும் அரசாங்கம் கொடுத்துள்ள வேலை அளவுக்கு அதிகமாகத் தமிழ் முகாம்களில் வேலைவாங்கப்படுவதாகவும் கட்டுப்பாடுகளுக்கிணங்க மறுப்பவர்களை ராஜினாமா செய்யும்படி முகாம் பொறுப்பதிகாரிகளினால் வற்புறுத்தப்படுவதாகவும் அறியப்படுகிறது.

## விசாரணை ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை, செவ்வாய்

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த சி. தியாகு, தா. விஜுசி. வி. ஐயக்நன், சி. பிச்சையப்பன் ஆகிய நால்வரும் அதே இடத்தைச் சேர்ந்த முருகன் சிற்றம்பலத்துக்கு கடந்த தை மாதம் 16-ந் திகதி கைக்குண்டு எறிந்து காயம் உண்டு பண்ணியதாக பொலிசாரால் குற்றம்சாட்டித்தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சி இளையதம்பி சாட்சியமளித்தபின் மாஜிஸ்திரேட் மேல்விசாரணையை ஒத்திவைத்துள்ளார்.

### பிரிட்டனில்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்பு இயக்கத்தைச் சேர்ந்த திரு. அபயக்கோன், கொழும்பில் சுகாதார போதனாசிரியராகக் கடமையாற்றும் திரு. ஆனந்தக்கொடை ஆகியோரே இந்தப்பயிற்சியைமேற்கொண்டு வரும் மற்றைய இலங்கையர்களாகும்.

## பதவியை இழக்கவில்லை

யாழ்ப்பாணம், செவ். நல்லூர் கிராம சபையின் முன்னாள் தலைவரும் நாலாம் வட்டார அங்கத்தவருமான கிருஷ்ணபிள்ளை துரைசிங்கம் அவரது அங்கத்துவப் பதவியை இழக்கவில்லை எனவும் அவரைக் கூட்டங்களுக்கு அனுமதிக்கவேண்டுமெனவும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். முருகவேள் நல்லூர் கிராமசபைத் தலைவருக்கு அறிவித்துள்ளார்.

திரு துரைசிங்கம் நான்கு கூட்டங்களுக்குத் தொடர்ந்து செல்லவில்லையெனக் காரணங் காட்டப்பட்டு அண்மையில் கிராமசபைக் கூட்டத்திற்கு அனுமதிக்கப்படாது தற்போதைய தலைவரான திரு. பொ. குமாரகுலசிங்கத்தினால் வெளியேற்றப்பட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து திரு. துரைசிங்கம்தான் வெளியேற்றப்பட்டது சட்டத்திற்கு புறம்பானது என உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் புகார் செய்திருந்தார். [கா. நி.]

## யேசுநாதரின் திருப்பாடுகளின் காட்சி

ஊர்காவற்றுறை. செவ் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் மாணவர்களால் தபசு காலத்தையும் பெரிய வெள்ளிதினத்தையும் முன்னிட்டு இம்மாதம் 5-ந் திகதி மாலை 6-30 மணிக்கு யேசுநாதரின் திருப்பாடுகளின் காட்சி நடித்துக் காண்பிக்கப்பட விருக்கிறது

இதற்காக விசேஷ பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## கல்வி அமைச்சருக்கு மாணவரின் தந்தை முறைப்பாடு

யாழ்ப்பாணம், புதன் தவணைப் பரீட்சைக்கு கல்லூரி வசதிக் கட்டணம் செலுத்தாத மாணவர் ஒருவன் பரீட்சைக்கு அனுமதிக்கப்படாது வெளியேற்றப்பட்டாராம். கொக்குவில்பகுதியிலுள்ள கல்லூரியொன்றில் இச்சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட மாணவனின் தந்தை கல்வி அமைச்சருக்குச் செய்துள்ள புகாரில் வசதிக்கட்டணம் பெற்றோரின் வசதிகேற்பவே செலுத்தவேண்டியிருந்தும், குறிப்பிட்ட கல்லூரி அதிபர் இவ்வாறு நடந்துகொண்டதற்கு உடனடியாக விசாரணை நடத்தவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்புகாரின் பிரதிகள் கல்வி மா அதிகாரிக்கும் வடமாநில வித்தியாதிபதிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. [கா. நி]

## யாழ்ப்பாணம் வரியிறுப்பாளர் சங்க தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் வரியிறுப்பாளர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

யாழ்ப்பாண மாநகரசபைக்குட்பட்ட பல வீதிகள் ஒழுங்கைகள் மின்சாரவசதியில்லாமல் இருட்டாகவே காட்சியளிப்பதால் அப்பகுதியில் வாழும் மக்களிடமிருந்து மதிப்பீட்டுப் பணத்தில் 2 வீதம் குறைவாக அறவிடப்பட வேண்டுமென்றும் மின்சாரவசதியளிக்கப்பட்டதும் மதிப்பீட்டு முழுத்தொகையை அறவிடலாமெனவும் மக்களின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வகையில் யாழ்ப்பாண மாநகரசபை மீண்டும் அதே மாநகரசபை நிர்வாகத்துக்குக் கொண்டுவரவேண்டுமென்றும் உள்ளூராட்சி மன்ற மந்திரியையும் யாழ்ப்பாணம் நல்லூர் முதலிய பாராளுமன்ற உறுப்பினர்களையும் கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. ரி- எஸ். துரைராசா, உபதலைவர்கள் சி, நடராசா, ஜி. நல்லையா கே. சோமசுந்தரம். இணைக் காரியதரிசிகள் திருவாளர்கள் பி. எம். ஜோன், எஸ். பாலசுப்பிரமணியம். இணைத் தனாதிகாரிகள்: திருவாளர்கள் எஸ். செபஸ்தியாம்பிள்ளை என். சின்னத்துரை. உத்தேசிக்கப்பட்ட 23 வட்டாரங்களுக்கு 23 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (கா. நி)

## லொறிமோதியவர் மாண்டார்

யாழ்ப்பாணம், புதன். லொறியால் மோதுண்ட 48 வயது பிரமச்சாரி ஒருவர் நேற்று முன்தினமிரவு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணமானார். இம்மரணம் சம்பந்தமாக திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினார்.

மரணமான பத்மநாதன் என்பவர் கடந்த மாதம் 29-ம் திகதி ஆனைப்பந்திக் கருகாமையில் வீதியைக் கடக்கும்போது லொறியில் மோதுண்டதாகவும், ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின்னர் ஆஸ்பத்திரியில் மரணமானதாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது

சம்பந்தப்பட்ட லொறியின் சாரதியான வல்லிபுரம் சண்முகநாதனை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு ஏம் ஜமீல் மீண்டும் இம்மாதம் 6-ந் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். இறந்தவரை யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியம் பிரேத பரிசோதனை செய்தார். [கா. நி]

## ரூபா 75 ஜீவனாம்சம்

வல்வெட்டித்துறை செவ். பொலிகண்டியைச் சேர்ந்த ம. சுந்தரலிங்கம் என்பவரை அவரது மனைவியான விமலா தேவிக்கும், ஒன்றரை வயதுக் குழந்தைக்கும் ஜீவனாம்சப்பணமாக மாதமொன்றுக்கு ரூபா 75 ரூபா செலுத்தும்படி பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா உத்தரவிட்டுள்ளார்.

## பொலிசாருக்கு அறிவிக்காமல் இறுதிக் கிரியை?

யாழ்ப்பாணம், புதன் திடீரென மரணமான ஒருவரின் சடலம் பொலிசாருக்கு அறிவிக்கப்படாமலேயே இறுதிக்கிரியைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாம். வவுனியாவில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி பொலிசார் மேலிடத்துக்குப் புகார் செய்துள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த வேலுப்பிள்ளை குணராசா என்பவருக்கு கடந்த பெப்ரவரி மாதம் 20-ந் திகதி திடீரென மரணமானவர் இறந்தவரின் மகனான கிருஷ்ணபிள்ளை என்பவர் பொலிஸ் சுப்பிரின்டனுக்குச் செய்துள்ள புகாரொன்றில் இறந்தவரின் மரணம் ஒரு கொலையாக இருக்கலாமெனச் சந்தேகம் தெரிவித்துள்ளார். [கா. நி.]

## நீதிமன்ற நலன்புரிச் சங்கம்

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நலன்புரிச் சங்கம் நேற்று மாலை நீதிமன்ற மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது

நீதிமன்றக் காரியதரிசி திரு எஸ். வேலாயுதர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்புவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர் திருஎன். ஏ, டி. எஸ். விஜயசேகரா [மாவட்ட நீதிபதி] உப போஷகர்: திரு. ஆர் பரமகுரு [மேலதிக மாவட்ட நீதிபதி)

தலைவர் திரு. எஸ். வேலாயுதர், உப தலைவர்கள் திரு சி. கந்தசாமி, செல்வி ஜி எம். அரசசிங்கம், காரியதரிசி, திரு. என். நடராசா உதவி காரியதரிசி என் பெரியதம்பி, தனாதிகாரி திரு. எஸ். சர்வானந்தா நூலகப்பொறுப்பாளர் திரு. ஏ. ஜே. அன்ரனி, கணக்குப் பரிசோதகர் திரு, பி. மயில்வாகனம். கமிட்டி அங்கத்தவர்கள் திருவாளர்கள் எம் அருந்தவராசா, எஸ். சிதம்பரநாதன் எம். எஸ். சிவசாமி, பி. சிவஞானம், ஏ. நடராசா எஸ். கனகராஜா டி. எட்வேட்.

## வலைகள் தட்டுப்பாடு

வல்வெட்டித்துறை, செவ். யாழ்ப்பாணப் பகுதியில் சூடைமீன் வலைகளுக்கு தட்டுப்பாடு தற்பொழுது அதிகரித்துள்ளது. இப்பகுதிகளில் இருக்கும் மீன்பிடி கூட்டுத்தாபன நிலையங்களிலும் அவ்வலைகள் இல்லாதிருப்பதால் மீனவர்கள் பருத்தித்துறை எம். பி திரு. கே. துரைரத்தினத்திற்கு முறையிட்டதைத் தொடர்ந்து அவ்வலைகளை உடனடியாக அனுப்பிவைக்குமாறு கொழும்பிலிருக்கும் மீன் பிடி கூட்டுத்தாபனத் தலைவரை தந்தி மூலம் அவர் கேட்டுள்ளார்.

### எதிரி....

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ப்பு வழக்கறிஞர் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்தபின்னர் மேல்விசாரணையை நீதிபதி இம்மாதம் 10-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

பொலிஸ்தரப்பில் வழக்கறிஞர் ஆர். ஜே செல்வரத்தினம் வழக்கை நடத்தினார் திரு, சிவ. சிறீதரனின் உதவியுடன் திரு. எஸ். நடராசா எதிரி சார்பில் ஆஜராகியிருந்தார்.

இவ்வருடம் மார்ச் மாதம் 14ம் திகதி இளவாலையைச் சேர்ந்த கந்தன் சின்னப்பொடியனைக் கொலைசெய்ததாக இவ் வழக்கில் எதிரன் பிரேமன அங்காளைப் பொலிசாரால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

## வழக்கு தாக்கல்

வல்வெட்டித்துறை செவ். உடுப்பிட்டியைச் சேர்ந்த சுந்தரலிங்கம். வ. கதிரவேலு, சி. ஆனந்தமயில் ஆகிய மூவரும் கெருடாவிலைச் சேர்ந்த முத்தன் செல்லன் என்பவருடைய வீட்டிற்கு சென்ற தைமாதம் 5 ந் திகதிஇரவு தீவைத்துசேதப்படுத்தியதாக வல்வெட்டித்துறைப் பொலிசார் நேற்று பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளனர். மாஜிஸ்திரேட் விசாரணை செய்வதற்காக மேமாதம் 2ந் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்துள்ளார்.

## வீடுதீக்கிரை

உடுவில், செவ். ஆனைக்கோட்டையை சேர்ந்த ஐயாத்துரை என்பவருடைய வீடு தீக்கிரையாக்கப்பட்டது. சுமார் ஆறுயிரம் ரூபா மதிப்புடைய இவ்வீட்டுக்கு ஐயாத்துரையின் மகனான திரு. நடராசா என்பவரால் தீ வைக்கப்பட்டதாம்.

புத்திசுவாதீனமற்றவர் என கருதப்படும் ஐயாத்துரை நடராசா என்பவரை ஆனைக்கோட்டைப் பொலிசார் கைதுசெய்து அங்கொடை மனநோயாளர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்துள்ளனராம்.

## அனுதாபம்

யாழ்ப்பாணம், புதன் சமீபத்தில் காலியில் விபத்துக்குள்ளாகி திடீர் மரணமான அளவெட்டியைச் சேர்ந்த, மின்சாரப்பகுதி உதவி தொழில் நுட்ப அதிகாரியான பொன்னம்பலம் வைத்தீஸ்வரனுக்கு (23வயது) ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை சேர்ந்த ஆசிரியர்கள் மாணவர்கள் அனுதாபம் தெரிவித்தனர். ஸ்கந்தவரோதயாக் கல்லூரிப்பழைய மாணவரான இவர் 'ஜீப்' விபத்தொன்றில் மரணமானார்.

## சிரமதானம்

உடுவில், செவ். கொக்குவில் சனசமூகநிலையத்தினர் கொக்குவில் மயானத்தைச்சிரமதானம் மூலம் திருத்தும் பணியினை சனசமூக நிலையத் தலைவர் திரு. க. த. இராசா தலைமையில் மேற்கொண்டனர் மாயானத்துக்கு செல்லும் வீதியும், மயான வளவும் துப்புரவு செய்யப்பட்டு திருத்தம் செய்யப் பட்டுள்ளது. இச் சிரமதான முயற்சியில் ஈடுபடுபவர்களில் அநேகமானோர் மாணவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

## புதுவருடக் கொண்டாட்டம்

அனுராதபுரம், செவ் அனுராதபுரப் பாதுகாப்பு சபையினதும்' வேறு சில தெரிவு செய்யப்பட்ட உயர்தர உத்தியோகத்தர்களையும் பொலிஸ் அதிகாரிகளையும் கொண்டுநிறுவப்பட்ட சபை இம்முறை வட மத்தியமாகாணத்திற்கான புதுவருட கொண்டாட்டங்களையும் அநுராதபுரத்தில் கொண்டாட முடிவு செய்துள்ளது.

ஆண்கள், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டி, விளையாட்டுப் போட்டியும், இரவு-மத்திய கல்லூரியில் களியாட்ட நிகழ்ச்சிகளும் அன்று நடைபெறவிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவற்குழி கிராமசபை கேள்வி விளம்பரம்

நாவற்குழிக் கிராமசபை அக்கிராசனரால் 1968-ம் ஆண்டு சித்திரை மாதம் 11-ம் திகதி முற்பகல் 10 மணிவரைக்கும 'கைதடி சுட்டுவாரக்கலட்டி இந்தனை ரோட்டு அமைத்தல்' வேலைக்கு மெழுகு சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் யாவும் பதிவுத் தபால் மூலம் கிராம சபை அக்கிராசனருக்கு அனுப்பப்படவேண்டும். கேள்வியின் நகல் பிரதியொன்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம், அவர்களுக்கு அதே நேரத்தில் அனுப்பப்படுதல் வேண்டும். கேள்வியைக் கொண்ட காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இன்ன வேலைக்கான கேள்வி என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

ரூபா 100/- கேள்விப் பிணைப்பணமாகக் கட்டியதன் பேரில் கிராமசபை அக்கிராசனரால் 10-4-68 நண்பகல் 12 மணி வரைக்கும் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரங்களில் கேள்விகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்பத்திரப்பணமாக ரூபா 25/- கட்டவேண்டும். இப்பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. கேள்விப் பத்திரங்கள் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

மேலதிகமான விபரங்கள் எதுவும் நாவற்குழிக் கிராம சபை அலுவலகத்திலாவது அல்லது உள்ளூராட்சி அமைச்சு யாழ்ப்பாண அலுவலகத்திலாவது அறிந்துகொள்ளலாம்.

கா. ஆறுமுகம்
அக்கிராசனர்,

கிராமசபை, நாவற்குழி
கிராமசபை அலுவலகம்,
நாவற்குழி, கைதடி.
1-4-68. 602

5—வது கிரிக்கெட் டெஸ்ட்

## இங்கிலாந்து: 1-வது இன். : 8 விக்கெட்டுக்கு 352

ஜோர்ஜ்டவுன், ஏப்ரல் 2 மேற்கிந்தியாவுக்கும் இங்கிலாந்திற்குமிடையேயான ஐந்தாவதும், கடைசியுமான கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாளாகிய நேற்று ஆட்ட இறுதியில் இங்கிலாந்து தனது முதலாவது இன்னிங்ஸில் 8 விக்கெட் நஷ்டத்துக்கு 352 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டி தனது முதலாவது இன்னிங்ஸில் 4'4 ஓட்டங்களை எடுத்தது.

## 'ஈழநாடு' வெற்றிக்கிண்ண விளையாட்டு போட்டி

### பங்குபற்றுவோர் விபரம்

யாழ்ப்பாணம், புதன் சுன்னாகம் பொலிஸ் பகுதியினரால் வருகிற வருடப் பிறப்பன்று நடாத்தப்படவிருக்கும் 'ஈழநாடு' வெற்றிக்கிண்ணப் போட்டியில் பங்குபற்றுவோர் தொகை விபரம் வருமாறு;

8 மைல் மரதன் ஓட்டப்போட்டி 14 பேர், 25 மைல் சைக்கிள் ஓட்டம் 28 பேர், சேவற்சண்டை 14 பேர், கிறீஸ் கம்பம் 16 பேர், போர்த்தேங்காய் அடித்தல் 10 பேர், கயிறிழுத்தல் 12 கோஷ்டிகள். வரபந்தாட்டம் 16 கோஷ்டிகள், சங்கீதப்போட்டி 8 பாடசாலைகள், நடனப்போட்டி 4 பாடசாலைகள்.

**முடிவு திகதி**

மார்ச்மாதம் 31-ந் திகதிக்கு முன்னரே போட்டிகளுக்கான விண்ணப்பங்களை அனுப்பும்படி கோரியிருந்தபோதிலும், இம்மாதம் 5-ம் திகதிவரைமுடிவுதிகதி நீடிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை செயலாளர். புதுவருட கொண்டாட்டசபை, பொலிஸ்பகுதி, சுன்னாகம் என்ற விலாசத்துக்கு அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.


101-வது தினம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில் 4 காட்சி
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
காவல்காரன்

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00 &9-45 p. m.
Mukey Hargity
in
THE SHERIFF WON'T SHOOT
[Color]

REGAL JAFFNA
Daily at 10-30,
4-45, -7-00, & 9-45 p.m.
THE GREAT
TRAIN ROBBERY
[Crime thriller depicting the recent London Train Robbery]
All passes Suspended


தீவுப்பகுதி

## கரப்பந்தாட்டப் போட்டிமுடிவுகள்

ஊர்காவற்றுறை, செவ் புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையத்தினரால் தீவுப்பகுதி எம். பி. திரு. நவரத்தினத்தின் வெற்றிக்கேடயத்திற்காக நடாத்தப்படும் கரபந்தாட்டப் போட்டியில் வெற்றியடைந்த கழகங்களின் விபரம் பின்வருமாறு:—

கரம்பன் விளையாட்டுக் கழகத்திற்கும் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் (பி) இடையில் நடைபெற்ற போட்டியில் ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. புள்ளி விபரம் 15—13. 15—3, 15—9.

சரவணை நாவலர் விளையாட்டுக் கழகத்துக்கும், றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் (ஏ) இடையே நடைபெற்ற போட்டியில் சரவணை நாவலர் கழகம் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. பே. பொன்னுச்சாமி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். புள்ளி விபரம் 15—3, 15—13.

ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கும் கரம்பன் விளையாட்டுக்கழகத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் கரம்பன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. புள்ளி விபரம் 15—11, 15—7.

போட்டிக்கு தீவுப் பகுதி விளையாட்டு அதிகாரி திரு பே. பொன்னுச்சாமி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## இடமாற்றம்

உடுவில், செவ்வாய் சுன்னாகம் பட்டினசபையின் மின்சாரப்பகுதி மேற்பார்வையாளராக கடமையாற்றிவரும் திரு. காளிதாசன் அக்கரைப்பற்று பட்டினசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## ஐக்கிய விளையாட்டுக் கழக அங்குரார்ப்பணம்

ஊர்காவற்றுறை, செவ். "ஊர்காவற்றுறையில் திறமையான விளையாட்டு வீரர்கள் இருந்தும், அவர்கள் வெவ்வேறான விளையாட்டுக் கழகங்களில் அங்கம் வகிப்பதனால் அவர்களுடையதிறமையை வெளிக்காட்ட முடியாத நிலையேற்பட்டுள்ளது.

இவ்விளையாட்டு வீரர்களை ஒன்று சேர்த்து ஒரு கழகத்தின் கீழ் இயங்கச் செய்து இங்கு பலம் பொருந்திய, விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்காகவே இந்த "ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்" அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை ஐ. வி. கழக அங்குரார்ப்பண கூட்டத்தில் தலைமை வகித்த திரு. என். யோசவ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்:- என். யோசவ், உபதலைவர்:- எஸ். பிலுப்புப்பிள்ளை, காரியதரிசி: எஸ். பி. ஜூசியன், விளையாட்டுத் தலைவர்:- எஸ். அந்தோனிசாமி, உதவி விளையாட்டுத் தலைவர்:- எஸ். வின்சன், தனாதிகாரி:- ஈ. எம். யோசவ் ஏழுபேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## நீதியரசர் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செவ் சுன்னாகம் பட்டினசபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கில் இம்மாதம் 7-ம் திகதி நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ தம்பையா கியூ சி, கீழைத்தேச மர்ம சாஸ்திரங்கள் பற்றி சொற்பொழிவாற்றுவார்


## வரி விளம்பரம்

விற்பனைக்கு

காணி:

சுண்டிக்குளியில் உள்ள கல்வீடும் கடையும்கொண்ட 7 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 19/1 சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளி. 1401

தோட்டம்

24 ஏக்கர்தென்னந்தோட்டம் பளையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ந. செல்லத்துரை சங்கரம்பிள்ளை வீதி, மானிப்பாய். 1404


## திருக்குரான் விழா

உடுவில், செவ்வாய் உலக பிரச்னைகளுக்கெல்லாம் தீர்வு காணக் கூடிய பொக்கிஷம் திருக்குரான். இதனை இஸ்லாமிய மக்கள் சிறந்த முறையில் பின்பற்றத் தவறியமைதான் இன்றைய இந்த நிலைக்கு மூலகாரணம்.


பலாலி அரசினர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற திருக்குரான் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. எம். எஸ். எம். பலீல் இவ்வாறு கூறினார்.

திருவாளர்கள் எம். ஏ. எம் முகமட், என். எம். ஹலீல், எஸ். எம். தல்ஹா எம். அபிபித்தீன் ஆகியோரும் உரையாற்றினர்.

பொதுக் காரியதரிசி ஜனாப் எம் சி. றசூல்டீன் நன்றி தெரிவித்தார்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

| | | |
|---|---|---|
| இங்ஸ்லி /கொழும்பு/ | பிளாஸா /வெள்ளவத்தை/ | வெலிங்டன் /யாழ்ப்பாணம்/ |
| விஜயா /மட்டுநகர்/ | ஸ்ரீகிருஷ்ணா /இருமலை/ | விஜிதா /ஹட்டன்/ |



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே. ஆர். விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்
சரஸ்வதி சபதம்
(ஈஸ்ட்மென் கலர்)

புது வருடப்பிறப்பை முன்னிட்டு
எங்களிடம் வாங்கும்
எல்லாவிதமான ஜவுளிகளுக்கும்
5% விசேஷ கழிவு வழங்கப்படும்.
உங்களின் ஜவுளித் தேவைகளைப் பெற்று மகிழ மறவாதீர்கள்!
சிவரும்ஸ்
(நூதனசாலைக்கு முன்பாக)
12, மெயின் வீதி — யாழ்ப்பாணம்.

இறைவன் திருமேனியில்
சந்தனக் காப்பிட்டு
அலங்கரிக்க மிகவும் உகந்த
பச்சை சந்தனம்
உடனுக்குடன் அரைத்துக் கொடுக்கிறோம்.
என்றும் எங்களிடம் கிடைக்கும்
சுந்தரம் பிரதர்ஸ்
கோவில் அபிஷேகப் பொருட்கள்
மருந்துச்சரக்கு விற்பனையாளர்
73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

மட்டக்களப்பு ஆனைப்பந்தி
பிள்ளையார் கோவில்
பிரம்ம ஸ்ரீ வி. வரதராசக் குருக்கள்
எழுதுவது:

அன்புடையீர்,
நீங்கள் அனுப்பி வைக்கும் பச்சைச் சந்தனம் சுத்தமானதாகவும் நறுமணமுள்ளதாகவும், தூய்மையாகவும் இருக்கிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆனைப்பந்தி பிள்ளையாருக்குச் சந்தனக்காப்புச் சாத்தி பணிந்து அருள் பெறுகிறார்கள் அடியார்கள். உங்கள் சேவை தொடர்ந்து நடந்துவர வேண்டுமென்று எல்லாம் வல்ல சித்தி விக்னேஸ்வரனை வேண்டுகிறேன்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வடபகுதி அசைஸ் விசாரணை

# "தம்பியைகுத்தியபின் எதிரி ஓடிவிட்டார்"

## முரசுமோட்டை கொலை வழக்கு

யாழ்ப்பாணம், புதன்

'சம்பவம் நடந்ததினம் இரவு 8 மணிக்கு நானும் எனது தம்பி சேனாதிராசாவும் பேரின்பநாயகமும் வந்துகொண்டிருந்தோம். அப்பொழுது வந்த எதிரி நீங்கள் பெரிய சண்டியர்களா? என்று கேட்டுவிட்டு என் தம்பியை குத்தினார்.'

முரசுமோட்டை கொலை வழக்கில் சாட்சியமளித்த கதிரவேலு தியாகராசா மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோட்டில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ தம்பையா கியூ. சி முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில்முரசு மோட்டையில் 66-ம் ஆண்டு டிசம்பர் 14-ம் திகதி சங்கரப்பிள்ளை கணேசமூர்த்தி என்பவர் கதிரவேலு சேனாதிராசாவை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் அட்வகேட் கே. வி எஸ். சண்முகநாதன் புறக்டர் அமிர்தநாயகத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் சி நாகராசா நியமிக்கப்பட்டிருந்தார்.

தியாகராசா சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:

எதிரி தம்பியை குத்தியவுடன் தான் எதிரியிடமிருந்த டோர்ச் லைற்றை பறித்து மண்டையிலடித்தேன். உடனே எதிரி ஓடிவிட்டார்.

காருக்கு ஆளைவிடு என்று தம்பி கூறினார். பேரின்பநாயகத்தை கார்கொண்டுவர அனுப்பினேன். கார் வந்தபின் அவரை காரில் ஏற்றினோம் அப்பொழுது அவர் இறந்துவிட்டார்.

டாக்டர் ரி. வி, ஞானத்துரை டாக்டர் ரி நல்லையா ஆகியோர் சாட்சியமளித்தனர்.

# துப்பாக்கி பிரயோகத்தில் மூவர் காயமடைந்தனர்

## கொடிகாமத்தில் சம்பவம்

சாவகச்சேரி, செவ்.

கொடிகாமத்தில் நேற்றிரவு நடந்த துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் ஒரு பெண் உட்பட மூவர் காயமடைந்தனர்.

படுகாயமடைந்த யோகர் சின்னத்தம்பி என்பவர் யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். நல்லம்மா, சேதுப்பிள்ளை ஆகிய இருவரும் சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

மீசாலை படுகொலை வழக்கில் 2-ம் எதிரியாக இருந்து நேற்று விடுதலை செய்யப்பட்ட விஜசித்தம்பி வேலாயுதத்தின் வீட்டில் நேற்றிரவு இத்துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் நடந்தது.

வேலாயுதத்தின் கார் சாரதியான சின்னத்தம்பி முதலில் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

சாவகச்சேரிப் பொலிசார் இத்துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக விசாரணை செய்துவருகின்றனர்.

## இ.தொ.க. தலைவர் உடுவில் எம்.பி.

உடுவில், செவ்வாய்

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் புதிய தலைவராக உடுவில் எம். பி. திரு வி. தர்மலிங்கம் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்.

ஹட்டனில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் வருடாந்தபிரதிநிதிகள் மாநாட்டில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என் நவரத்தினம் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெற்றது.

## முரசுமோட்டை கொலை வழக்கு எதிரிவிடுதலை

யாழ்ப்பாணம், புதன்

முரசுமோட்டைக் கொலை வழக்கில் எதிரி ஒரு வருட நன்னடத்தைப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். விசாரணை நடுவில் எதிரி கைமோசக் கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டதை தொடர்ந்து நீதியரசர் தீர்ப்பு வழங்கினார்.

அசைஸ் விசாரணை இம் மாதம் 6-ம் திகதிவரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை

## சீமெந்து விலை அதிகரிப்பு

அளவெட்டி, வசவ்வாய்

நேற்று முதல் காங்கேசன்துறை சீமந்துத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் சீமெந்தின் விலை உயர்ந்துள்ளது.

இதற்கு முன் ஒரு அந்தர் 9 ரூபாவாக விற்கப்பட்டு வந்த சீமெந்து ஏப்ரல் 1-ந் திகதி முதல் அந்தர் 10 ரூபாவாக விற்கப்படுகிறது.

வெளிநாட்டிலிருந்து வரும் சீமெந்து 10 ரூபா 50 சதமாக விற்கப்படுவதால் இச்சீமந்தும் 10 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது என தெரிய வருகிறது.

அடுத்த மாதம் ரஷ்யாவிலிருந்து சீமந்து இறக்குமதி செய்ய இருப்பதால் சீமெந்தின் விலை குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## எதிர்க்கட்சி......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மே மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் பல சுதந்திரக்கட்சி அங்குரார்ப்பண கூட்டங்களிலும், திருமதி சிறீமா பண்டாரநாயக்கா சொற்பொழிவாற்றுவார் எனத் தெரிய வருகிறது.

வடபகுதியில் சுதந்திரக் கட்சியின் முதலாவது கிளை இம்மாத இறுதியில் காரைநகரில் நிறுவப்படவிருக்கிறது. இதைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை, கிளிநொச்சி, சங்கானை, சாவகச்சேரி யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய இடங்களில் கிளைகள் நிறுவப்படுமெனத் தெரிய வருகிறது'

சாவகச்சேரித் தொகுதியில் கிளையொன்றை நிறுவுவது சம்பந்தமாக நேற்று அனுராதபுரம் எம். பி. திரு. இரத்னயக்கா உசனுக்குச் சென்று ஓர் ஆலோசனைக் கூட்டத்தை நடாத்தினார்.

இக்கூட்டத்தில் பல வாலிபர்கள் கலந்து கொண்டார்கள்.

பூநகரி-சங்குப்பிட்டி

## கடலை மூடக் கோரிக்கை

பூநகரி, செவ்.

பூநகரிப்பகுதி மக்களின் முன்னேற்றம் கேரதிவு - சங்குப்பிட்டிக் கடல் மூடுவதினால் தான் உயரும். கடல் மூடாமல் தடைப்பட்டால் பூநகரிமக்களும், பொதுவாக வடமாகாண மக்களும் இதனால் பாதிக்கப் படுவார்கள் உப்பு விளைவிப்பதற்காக கடலை மூடாமல் விடவேண்டாம்.

இவ்வாறு குறிப்பிட்ட மகஜர் ஒன்றை பூநகரி தமிழரசுக்கட்சிவாலிபமுன்னணி செயலாளர் திரு. கே. தனபாலசிங்கம் பிரதம மந்திரிக்கும், தபால் தந்தி மராமத்து மந்திரி திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமாவுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

பூநகரிக் காரியதிகாரி பிரிவில் 2 கிராமசபை உண்டென்றும், இது வரை நான்குகுடியேற்றத் திட்டங்கள் நிறுவப்பட்டுள்ளன வென்றும், மேலும் பல குடியேற்றத்திட்டங்கள் நிறுவ இருப்பதால் கேரதீவுசங்குப்பிட்டிக்கடல் சம்பந்தமாக கவனம் செலுத்துமாறு மேலும் இம் மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

# மீசாலை கொலை வழக்கில் 6 எதிரிகளும் விடுதலை

சாவகச்சேரி, செவ்.

மீசாலை படுகொலை வழக்கில் எதிரிகள் ஆறு பேரும் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வழக்கு நேற்று சாவகச்சேரி மாஜிஸ்திரேட்கோர்ட்டில் நீதிபதி திரு. விக்னராசா முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில் இவ்வருடம் பெப்ரவரி 14-ம் திகதி மீசாலையில் கணபதி ரத்தினத்தைக் கொலைசெய்ததாக சின்னப்பொடி இரத்தினம், விஜசித்தம்பி வேலாயுதம், சின்னப்பொடி செல்வநாயகம் அல்லது இல்லைநாதன், கணபதிப்பிள்ளை செல்லையா, அல்லது பொன்னன் சின்னையா, கைலாயபிள்ளை, பொன்னம்பலம் தம்பிராசா ஆகியோர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

டாக்டர் கனகசுந்தரம், சண்முகசுந்தரம், செபமாலை வல்லிபுரம், என். ராஜேந்திரம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

[illegible] மாஜி[illegible] விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

# மட்டக்களப்பு தமிழ் சங்க முயற்சி பலித்தது

களுவாஞ்சிக்குடி, செவ்

1969-ம் ஆண்டு முதல் மதுரை தமிழ் சங்கத்தினால் நடாத்தப்படும் தமிழ்ப் புலவர் பரீட்சை இலங்கையிலும் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கம் மதுரைத் தமிழ்ச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு இலங்கையிலுள்ளவர்களும் மேற்படி பரீட்சையை எடுத்து சித்தியடைய ஒழுங்கு செய்து தரும்படி கேட்டதற்கிணங்கவே அப்பரீட்சையை நடாத்தும் உரிமையை மதுரைத் தமிழ்ச்சங்கம் மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத்திற்கும் வழங்கியுள்ளது.

புதுவருடப்பிறப்பன்று மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்துக்கு ஒரு நிரந்தரக் கட்டடம் நிறுவுவதற்கான அத்திபாரக்கல் நாட்டப்படவிருக்கிறது.

# மின்சாரத்துக்கு வாலிபன் பலி

## புத்தளத்தில் சம்பவம்

அளவெட்டி, செவ்.

புத்தளம் சிமெந்து தொழிற்சாலையில் ஒரு வாலிபர் மின்சாரத்துக்குப் பலியானதாக அறியப்படுகின்றது.

காங்கேசன்துறையையடுத்த வாங்கோலையைச் சேர்ந்த சுப்பையா சிவஞானம் [வயது 21] காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் வேலைபழகி பதவி உயர்வு பெற்று புத்தளம் சிமெந்துத் தொழிற்சாலையில் கடந்த மூன்று மாதங்களாக வேலையிலீடுபட்டிருந்த போது நேற்று இரவு மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகி மரணமானார் என்று அறியப்படுகின்றது.

இது சம்பந்தமாக தேவையான ஒழுங்குகள் செய்வதற்காக காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை அதிகாரிகள் அங்கு சென்றுள்ளார்கள்

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருப்பதுடன் தொழிலாளரின் இறுதி மரியாதைக்காக சடலம் இங்கு கொண்டுவரப்பட்டு உரியவரிடம் சேர்ப்பிக்கப் பட இருப்பதாக அறியப்படுகிறது.

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

கொக்குவில் மேற்கு மணியர்பதி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில் அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகிறது. உற்சவ காலமான பத்து நாட்களும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் மகா பாரத - கதாப்பிரசங்கம் செய்வார்.

## யாழ். அனுராதபுரம் பாட்மிண்டன் மோதல்கள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணப் பாடசாலைகளின் மாணவ மாணவிகளின் கூட்டு ஆண் பெண் பாட்மின்டன் கோஷ்டிகளுக்கும் அனுராதபுரம் பாடசாலைகளின் கூட்டு ஆண் பெண் பாட்மின்டன்கோஷ்டிகளுக்கு மிடையேயான பாடமின்டன் மோதல்கள் அனுராதபுரம் 'நியூரவுண்' மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் இம்மாதம் 5-ந்திகதி நடைபெறவிருக்கின்றது. யாழ்ப்பாண ஆண்கள் கோஷ்டியில் எஸ் நிமலானந்தா காப்டனாகவும் மற்றும் சென். ஜோன்ஸ் கல்லூரியைச்சேர்ந்த எஸ். சுகுமார் ஜே ஈ. ஆர் செல்லத்தம்பு ஆகியோரும் யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்தஎஸ். யோகேஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பெண்கள் கோஷ்டியில் கொன்வென்ற் மகளிர் கல்லூரியைச்சேர்ந்த ஏ. அஞ்சலா செல்லத்தம்பு காப்டனாகவும் வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த எஸ். சுமங்கலா வடிவேலு சசிகலா ஆறுமுகம் ஆகியோரும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த றஞ்சினி சபாரத்தினம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன்தேவஸ்தானத்தில் 11-ம் திருவிழாவாகிய இன்று மாலை 6 மணி முதல் இரவு 7-30 மணிவரை நல்லை ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதத் தம்பிரான் சுவாமிகளின் சம்பூர்ண இராமாயணக் கதாப் பிரசங்கத் தொடரில் ''கண்டேன் சீதையை'' என்னும் பொருள் பற்றிய கதாப் பிரசங்கமும், இரவு 7-30 மணிக்கு வசந்த மண்டப பூஜையும், பின்னர் பூதவாகனத்தில் சுவாமி வெளி வீதிவலம் வருதலும், பின் இரவு 10 மணிக்கு அர்த்த ஜாமப் பூஜையும் நிகழும்.

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், புதன்

திருநெல்வேலி கிழக்கு இந்துஇளைஞர் இயக்கத்தின் 19-வது ஆண்டுவிழா இம் மாதம் 16-ம் திகதி யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் எஸ். சண்முகநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. 25 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியும், 5 மைல் மரதன் ஓட்டப்போட்டியும் கலைநிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம் பெறும்.

## பாடசாலைகள் 27-ல் ஆரம்பம்

புன்னாலைக்கட்டுவன், புதன்

இலங்கையிலுள்ள சகல அரசாங்க பாடசாலைகளும் இம்மாதம் 8-ம் திகதி விடுதலைக்கு மூடப்பட்டு இம் மாதம் 27-ம் திகதி ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவருக்கான இறுதிப் பரீட்சை இம்மாதம் 9-ம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது.

## உள்ளூர் இடமாற்றம்

புன்னாலைக்கட்டுவன், புதன்

வடபிரதேசத்துக்குள்ளான இடமாற்ற முன்னறிவித்தல்கள் ஆசிரியர்களுக்கு கிடைத்துள்ளன. இவ்வாசிரியர்களுக்கான இடங்கள் அறிவிக்கப் பட்டுள்ளன. திகதிகள் பின்னர் அறிவிக்கப்படுமெனத் தெரிகின்றது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ம் திகதி அச்சி[illegible] பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org